**தலைப்பு 312 – மேல் மாகாண சபை**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடு

### 1.1 தூரநோக்கு

சகவாழ்வு மற்றும் நிரந்தர அபிவிருத்தியால் மேல் மாகாணம் முன்னணியில்

### 1.2 செயற்பணி

நிதி, பௌதீக மற்றும் மனித வளத்தை மிக திறமையாக கொண்டு நடாத்தி சகல சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும் சமாதானம் மற்றும் சகவாழ்வு நிறைந்த நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

### 1.3 பிரதான செயற்பாடு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மேல் மாகாண சபைக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 46,586.90 மில்லியன் தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 46,586.90 மில்லியனான மொத்த தொகையும் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | |
|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழுபவை | 45,442.00 | 45,442.00 |
| மூலதனம் | 1,144.90 | 1,144.90 |
| **மொத்தம்** | **46,586.90** | **46,586.90** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

பாராளுமன்றத்தால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.